மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்கள் ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களிடத்திலே பேசுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, மாணவர்கள் வைத்திருக்கின்ற இந்தக் கோரிக்கைகள் போன்று வேறு எந்த மாநிலத்திலாவது இப்படி கோரிக்கைகள் விடப்பட்டு அவற்றை அந்த அரசுகள் நிறைவேற்றி இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவை எல்லாம்தான் பரிசீலிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

(ஆ). சாத்தனூர் அணையின் இடதுபுற கால்வாய் பாசன பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையின் இடதுபுறக் கால்வாய்யிலிருந்து அதன் கடைசிப் பகுதியான 10 கிராமங்களுக்கு பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்காததால் பயிர்கள் கருகியது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் வனத்திற்க்கு கொண்டு வருகிறேன்

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் இடதுகரை கால்வாய் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள செங்கம் மற்றும் திருவண்ணாமலை வட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோயிலூர் வட்டத்திலும் 24,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனமளிக்கிறது. ஆயக்கட்டு நிலங்களில் மானாவரில் பயிர்கள் இருந்தால் வழக்கமாக திறந்துவிடக் குறிக்கப்பட்ட நாளான டிசம்பர் மாதம் 15-ந் தேதிக்குப் பதிலாக 6–1–82-ம் தேதியன்று சாத்தனூர் இடதுகரைக் கால்வாய் பாசனத்திற்கு திறந்து விடப்பட்டது தற்போது 11,000 ஏக்கர் நிலங்களில் டன்செய் பயிரிடப்பட்டுள்ளது இவைகளுக்கு போதிய நீர்விடப்படுகிறது எஞ்சிய பகுதியில் விவசாய வேலைககள் நடைபெற்று வருகின்றன அவற்றிற்கும் போதிய நீர்விடப்படுகிறது. எனவே, போதிய நீர்விடப்படாததால் 12,000 ஏக்கர் நிலங்களில் நன்செய், டன்செய் பயிர்கள் சாவியாகிவிட்டன என்பது சரியல்ல.

1982 பிப்ரவரி 8] [திரு. கே. இராஜா முகமது]

கடைமடைப்பகுதி நிலங்கள் உட்பட எல்லா நிலங்களுக்கும் நீர் கிடைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன

**திரு த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைமடைப்பகுதி நிலங்கள் உட்பட பாசன வசதி செய்து தரப்படுவதாக அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட் டார்கள் ஆனால் கடைமடைப் பகுதியான ISP, IOR, IIR, போன்ற கால்வாய்களில் கடைசி பகுதியில் தண்ணீர் இன்று வரை அறவே வரவில்லை. டிசம்பரில் வழக்கமாக தண்ணீர் திறந்துவிடப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அவ்வாறு இல்லை. அணையின் பாசன விவசாயிகளை அழைத்து துணை ஆட்சித்தலைவரின் கருத்தைக் கேட்டபோது அவர்கள் ஜனவரி 1-ம் தேதி திறந்து விடவேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் கேட்ட டதுபோல் 1 ஆம் தேதியன்று திறந்துவிடப்படவில்லை. 5–1–1982 ஆம் தேதியன்று திறந்துவிடப்பட்டிருக்கிறது. திறந்து விடப்பட்டு 34 நாட்கள் ஆகின்றன. இதுவரையில் கடைசிப் பகுதியில் இருக்கும் 10 கிராமங்களுக்கு தண்ணீர் பாயவில்லை. உடனடியாக அவர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் தலைவா அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் 4–2–1982 ஆம் தேதியன்று இந்த கவன ஈர்ப்பைக் கொடுத்தபோதே சம்பந்தப்பட்ட பொறியாளரிடம் தகவல் கேட்கப்பட்டது. அவர் பத்து கிராமங்கள் என்றுதான் பொது வாக கூறியிருந்தார். நாங்கள்தான் அந்த கடைமடைப் பகுதி யிலே இருக்கும் இடங்கள் என்னென்ன என்று விளக்கம் கேட் டிருந்தோம். நாங்கள் இந்தப் பகுதிகளில் 15 ஆம் தேதி யன்று தண்ணீர் கொடுக்க தயாராக இருந்தோம். ஆனால் மானாவரிப் பயிர்கள் ஏற்கனவே பயிரிடப்பட்டு விட்டக் காரணத்தால் இப்பொழுது தண்ணீர் கொடுப்பதால் நன்மை யில்லை. எனவே அந்த நாளை ஒத்திவைக்க வேண்டும் என்று அவர்களாகவே கேட்டுக் கொண்டதன்பேரில்தான் தள்ளிவைத் தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 5 ஆம் தேதியன்று கொடுக்கப்பட்டதாக சொல்கிறார்கள். இல்லை. 6–2–1982 ஆம் தேதியன்றுதான் கொடுத்தோம். அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில்தான் தள்ளிவைத்து, அவர்களே கேட்டுக் கொண்டபடி 6–2–1982 ஆம் தேதியன்றுதான் திறந்துவிட் டிருக்கிறோம். மேலும், அங்கே 11,000 ஏக்கர் நிலங்கள்

தான் புஞ்சை சாகுபடி செய்கின்றன. மற்ற இடங்களில் இடம் விட்டு இடம் தள்ளி விவசாயம் செய்யப்படுகிறது. அவர்களின் தேவைக்கேற்பத்தான் அந்தப் பகுதிகளில் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. த. வேணுகோபால் :** பேரவைத் தலைவர் அவர்களே, அணையிலே தற்போது தண்ணீர் நிரம்பியிருக்கிறது. இப்படி நிரம்பியிருக்கிற நேரத்திலேயே, ஆரம்பக் காலத்திலேயே கடைசிப்பகுதியான கிராமங்களுக்கு தண்ணீர செல்லவில்லை என்றால், ஏப்ரல், மே மாதங்களில் எப்படி தண்ணீர் போய்ச் சேரும் - அந்தப்பகுதி மக்கள் எப்படி பயிர் செய்வார்கள். தற்போது இருக்கும் இந்த நிலைமையை மாற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் தலைவர் அவாகளே, சாத்தனூர் இடதுகரை கால்வாய் சம்பந்தப்பட்ட அந்தப் பகுதிகளில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் பதிவு செய்யப்பட்ட ஆயக் கட்டுகளாக அந்த நிலங்கள் இருக்குமேயானால், நிச்சயமாக தண்ணீர் கொடுப்பதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிக்கை அளித்தல்.

### மதிப்பீட்டுக் குழு.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக 7-வது சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுத் தலைவன் என்ற முறையில் பொது நூலகங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் ஒன்பதாவது அறிக்கையையும்;

பொதுத் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிற விருந்தினர் இல்லங்கள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து, மேற்படி குழுவின் பத்தாவது அறிக்கையையும் நான் பேரவைக்கு அளிக்கிறேன்.